# புதுவையில் வெப்ப அலையுடன் 104 டிகிரி வெயில் பதிவு

## பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவதி

புதுச்சேரி, ஜூன் 9: புதுச்சேரியில் நடப்பாண்டிலேயே நேற்று அதிகபட்சமாக 104 டிகிரி வெயில் பதிவானது. பகல் நேரங்களில் வெப்ப அலை வீசியதால், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் குளிர்பான கடைகளை நோக்கி படையெடுத்தனர்.

புதுச்சேரியில் கடந்த மார்ச் மாதம் முதல் கோடைகாலம் துவங்கியது. இந்தாண்டு முதன் முறையாக கடந்த ஏப்.12ம் தேதி 100.4 டிகிரி பதிவானது. தொடர்ந்து, கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் மே 4ம் தேதி தொடங்கி 28ம் தேதி நிறைவடைந்தது. இதில் மே 4ம் தேதி 100.6 டிகிரியும், 12ம் தேதி 102.6 டிகிரியும் பதிவாகி இருந்தது. ஆனால், இந்தாண்டு தென் மேற்கு பருவமழை முன்னதாக தொடங்கியதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்தது. இதனால் கத்திரி வெயிலில் இருந்து பொதுமக்கள் தப்பினர்.

இந்நிலையில் ஜூன் 1ம் தேதி முதல் கத்திரிக்கு இணையாக வெயில் கொளுத்தி வருகிறது. தினமும் 99 டிகிரிக்கு மேல் வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் 1ம் தேதி 101.5 டிகிரியும், 7ம் தேதி 100.8 டிகிரியும் பதிவாகி இருந்தது. இதன் தொடர்ச்சியாக, நேற்று யாரும் எதிர்பார்க்காத வகையில் 104 டிகிரி பாரன்ஹீட் பதிவானது. இது நடப்பு கோடை சீசனில் பதிவான அதிகபட்ச வெயிலாகும். இந்தாண்டு 6வது முறையாக வெயில் சதம் அடித்துள்ளது.

விடுமுறை தினமான நேற்று காலை 11 மணி முதல் மாலை 4 மணி வெப்ப அலையுடன் 104 டிகிரி பதிவானதால், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். மேலும், வாகன ஓட்டிகள் சாலைகளில் செல்லும் போது, வெப்ப அலை காரணமாக, மூச்சுவிட சிரமப்படும் நிலை ஏற்பட்டது. வெயின் தாக்கத்தை சமாளிக்க முடியாமல் நீர் மோர், இளநீர், நுங்கு, தர்பூசணி, பழச்சாறு மற்றும் குளிர்பானங்களை பொதுமக்கள் அதிகமாக வாங்கி பருகுகின்றனர்.

இதுகுறித்து வானிலையாளர் பாலமுருகன் கூறுகையில், தென்மேற்கு பருவமழை இந்தாண்டு 8 நாட்களுக்கு முன்பு தொடங்கிவிட்டது. இதன் காரணமாக கேரளா மற்றும் தமிழக பகுதிகளில் மழை தொடர்ந்து இருந்தது. தற்போது தென் மேற்கு பருவமழை தீவிரம் குறைந்து வரும் நிலையில் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதியில் இருந்து தற்போது வறண்ட காற்று வீசி வருகிறது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரமாக 100 டிகிரி அளவுக்கு வெயில் பதிவாகி வருகிறது.

கடந்த மே மாதம் முழுவதும் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நிலையில் 2 நாட்கள் மட்டுமே 100 டிகிரி வெயில் பதிவானது. ஆனால், ஜூன் மாதத்தில் நேற்றுடன் 3 நாட்கள் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகியுள்ளது. இனி வரும் நாட்களில் படிப்படியாக வெயிலின் தாக்கம் குறையும் என்றார்.

இதற்கிடையே நேற்று மாலை மேகமூட்டம் காணப்பட்ட நிலையில் இரவு 7 மணி முதல் பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்ப சலனம் குறைந்து குளிர்ச்சியான சூழல் நிலவியதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

### 10 ஆண்டுகளில் பதிவான அதிகபட்ச வெயில் விவரம்

புதுச்சேரியில் ஜூன் மாத வரலாற்றிலேயே அதிகபட்சமாக கடந்த 2012ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி 110.12 டிகிரி பதிவாகியுள்ளது. இந்நிலையில் 2015 முதல் 2025 வரை ஜூன் மாதத்தில் மட்டும் பதிவான அதிகபட்ச வெயில் விவரம் வருமாறு:

| வ.எண் | ஆண்டு | தேதி | வெயில் அளவு |
|---|---|---|---|
| 1 | 2015 | 12, 19 | 104 |
| 2 | 2016 | 16 | 102.92 |
| 3 | 2017 | 7 | 104.72 |
| 4 | 2018 | 18 | 101.12 |
| 5 | 2019 | 18 | 105.62 |
| 6 | 2020 | 9 | 104.72 |
| 7 | 2021 | 2 | 102.92 |
| 8 | 2022 | 2, 3 | 100.76 |
| 9 | 2023 | 4 | 105.26 |
| 10 | 2024 | 1 | 103.46 |
| 11 | 2025 | 8 | 104 |



### பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுமா?

புதுச்சேரியில் ஆண்டுதோறும் கத்திரி பிறகு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதனால் பள்ளி மாணவர்களுக்கு மே மாதம் கோடை விடுமுறை முடிந்தாலும் ஜூன் முதல் வாரம் அல்லது 2வது வாரம் வரை விடுமுறை நீட்டிக்கப்படும். ஆனால், இந்தாண்டு கத்திரி வெயில் காலத்தில் மழை பெய்து குளிர்ச்சியாக நிலவியது. இதனால் கல்வித்துறை அறிவித்தப்படி ஜூன் 2ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்நிலையில் கடந்த 1ம் தேதி முதல் நேற்று வரை தினமும் 99 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் பள்ளி மாணவர்களுக்கு ஒரு வாரம் விடுமுறை விட கல்வி அமைச்சர் நமச்சிவாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் மற்றும் சமூக அமைப்புகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தினகரன் தேதி: 09.06.2025